**தலைப்பு 194 - தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 194 – தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தம்பர் 28 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு

வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதகைமை | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. | செயல்நடவடிக்கை திட்டம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டிராமை. | 2.1 |
| | | 2. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை | 2.4.1 |
| | | 3. | பாதீட்டு மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட்டிராமை. | 2.9(அ) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 4. | கட்டுநிதி மதிப்பீடுகள் தயாரிப்பதிலான குறைபாடுகள் | 2.10(ஆ) |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாப்பிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. | முகாமைத்துவ குறைபாடுகள் | 2.7 |
| | | 2. | மனித வள முகாமைத்துவத்தில் பலவீனங்கள் | 2.12 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 1. | எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை | 2.2(அ) |
| | | 2. | பெறுகை நடைமுறையை நடைமுறைப்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.4.1 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. | வாகனப் பயன்பாட்டிலான குறைபாடுகள் | 2.5.1 |
| | | 2. | செயற்பாட்டு குத்தகை அடிப்படையிலான வாகனங்களை பயன்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.5.2 |
| | | 3. | அலுவலகத்தினை நடாத்துவதிலான குறைபாடுகள் | 2.5.3 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சினால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் | 1. | வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை சமர்ப்பிக்காமை | 2.3 |
| | | 2. | வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.11 |

| | | | | |
|---|---|---|---|---|
| | கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல் | | | |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | 1. | ஒதுக்கீடு செய்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை | 2.9(ஆ)(i) |
| | | 2. | குறைநிரப்பு மதிப்பீட்டிலான ஒதுக்கீடுகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.9(ஆ)(ii) |
| 127(7) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதற்கும் கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் | 1. | நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.6 |
| | | 2. | நிதியுடன் தொடர்பு படுகின்ற உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை வைப்புக்களை பெற்றுக் கொள்ளப்படாமை | 2.13 |

முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல்.

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் முறையாக தயாரிக்கப்பட்டிராததுடன், பின்வரும் விடயங்கள் அவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டிற்குரியதாக நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி தொடர்பான விபரங்கள்

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய வருடாந்தம் பாதீட்டினை அடிப்படையாக கொண்ட முன்னுரிமைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட கால அட்டவணை மற்றும் அந்த செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட அடைவு பிரதிபலன் மதிப்பீடுகள்.

(இ) வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம் (Imprest Requirement Plan)

(ஈ) உள்ளக கணக்காய்வு திட்டம்.

(உ) அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதான 05 பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த பணிகளை வேறுவேறாக இனங்காணக்கூடிய வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன், அபிவிருத்தி பணிகள் மாத்திரம் உள்ளடக்கப்படும் வகையில் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 2.2 பணிகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) உத்தேச அடைவு மட்டத்தினை அடையப்பெற்றிராமை

(i) அமைச்சினால் 22 செயற்திட்டங்களை மேற்கொள்வதற்காக ரூபா 2,290.10 மில்லியன் தொகையான நிதியேற்பாடு பெறப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அவற்றுள் ரூபா 251.13 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. ஆண்டிற்காக செலுத்த வேண்டியதாக காணப்பட்ட செலவினம் ரூபா 328.89 மில்லியன் ஆனமையால் நிதி முன்னேற்றம் 25 சதவீதம் மாத்திரமாகும்.

(ii) அமைச்சிற்காக 16 செயற்திட்டங்களின் கீழ் ரூபா 1,883 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் ரூபா 119.66 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 1,763.34 மில்லியன் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.

(iii) இந்த 16 செயற்திட்டங்களில் 06 இன் முழு நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்த போதிலும், 10.2 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையான பௌதீக செயன்முன்னேற்றமொன்று மற்றும் 09 செயற்திட்டங்களின் 75.95 சதவீதம் முதல் 99.9 சதவீதம் வரையான நிதி முன்னேற்றமொன்றிற்காக 25 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான பௌதீக செயன்முன்னேற்றமொன்று அறிக்கையிடப்பட்டிருந்தது.

(iv) வருடாந்த மதிப்பீட்டில் ரூபா 39.1 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் தகவல் தொழில்நுட்ப பூங்கா, நெசனல நிலையங்களை பரவலாக்கல் மற்றும் புதிய வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் மாவட்ட தகவல் தொழில்நுட்ப வள நிலையங்களை தாபித்தல் போன்ற செயற்திட்டங்களை ஆண்டினுள் இடைநிறுத்துவதற்கு அமைச்சினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

(v) இவ்வாறு செயற்திட்ட செயன்முன்னேற்றம் குறைவான மட்டத்தில் காணப்படுவதற்கான காரணங்கள் முன்வைக்கப்படாததுடன், உரிய திட்டமொன்று இல்லாது நிதியேற்பாட்டினை பெற்றுக்கொள்ளல், பெறுகைகள் கால அட்டவணைக்கமைய நடவடிக்கை எடுக்காமை, பெறுகைகளுக்காக நீண்டகாலம் எடுக்கின்றமை, பெறுகை நடவடிக்கைகள் ஆண்டின் இடைநடுவில் ஆரம்பித்தல், கட்டளையிடல் ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டமை போன்ற காரணங்கள் குறைவான செயலாற்றலுக்கு தாக்கம் செலுத்தியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(vi) பாடசாலை கணனி ஆய்வுகூட செயற்திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 860 பாடசாலைகளுக்காக கணனி ஆய்வுகூடங்கள் தாபிக்கப்பட்டிருந்ததுடன், அது ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்ட பாடசாலை கணனி ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை 6 முதல் 222 வரையான வீச்சில்

பரம்பலடைந்திருந்தது. ஆய்வுகூடத்தை தாபிப்பதற்காக பாடசாலைகளை தெரிவு செய்யும் நடைமுறையானது கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(vii) கடந்த 05 வருடங்களுக்காக யாழ்ப்பாணம் தகவல் தொழில்நுட்ப பூங்காவிற்காக மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்கள் ரூபா 33 மில்லியனை விஞ்சி வழங்கப்பட்டிருந்த போதிலும், நலன்களை பெற்றுக்கொண்டோரின் எண்ணிக்கை 726 ஆகும். அதில் கிடைத்த வருமானமானது செலவினத்தின் சதவீதமாக 3.8 சதவீதமாகும். 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆம் ஆண்டில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 148 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**(ஆ) செயன்முன்னேற்றத்தை சமர்ப்பிக்காத செயற்திட்டங்கள்**

---

மீளாய்வாண்டின் போது ரூபா 58.79 மில்லியன் தொகையான நிதியேற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியதாக காணப்பட்ட, எனினும் செயன்முன்னேற்றத்தை சமர்ப்பிக்காத செயற்திட்டங்களின் எண்ணிக்கை 03 ஆகும். இந்த செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டம் பெற்றுக்கொள்ளப்பட்டிராத போதிலும், அது எந்த அளவிலானது என்பதை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் காணப்படவில்லை.

## 2.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

---

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களினுள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை 2018 ஆகஸ்ட் 06 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

---

அமைச்சினால் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட்டு வழங்கல்கள் மற்றும் சேவைகள் மற்றும் மதியுரைக் கட்டணங்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ரூபா 2,384,161,450 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 342,118,469 தொகையான நிதியேற்பாடு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 2,042,042,981 அல்லது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 85.65 சதவீதமான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.

### 2.4.1 பெறுகை நடைமுறையினை அமுல்படுத்தல்

---

பெறுகை நடைமுறையினை அமுல்படுத்தல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இ - கிராம உத்தியோகத்தர் செயற்திட்டத்திற்காக அச்சீட்டு இயந்திரங்களை கொள்வனவு செய்தல்**

---

2017 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்திற்கமைய இ-கிராம உத்தியோகத்தர் செயற்திட்டத்திற்காக 133 அச்சீட்டு இயந்திரங்கள் கொள்வனவு செய்ய மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 164 அச்சீட்டு இயந்திரங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(ஆ) பாடசாலை கணனிக்கூட செயற்திட்டத்திற்காக கணனி மற்றும் கணனி உப பாகங்களை கொள்வனவு செய்தல்**

---

(i) 101 பாடசாலை கணனிக்கூடங்களை நிறுவுவதற்காக கட்டம் 1 மற்றும் 2 எனுமாறு இரண்டு சந்தர்ப்பங்களின் கீழ் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஒரே தடவையில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளாமைக்கான காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2 ஆம் கட்டத்தின் கணனி மற்றும் உப பாகங்களை கொள்வனவு செய்தல் ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அதற்கான கொடுப்பனவு மேற்கொள்ளல் 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) மேலும் கட்டம் 1 மற்றும் 2 ஆகியன ஒரே நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 1 ஆம் கட்டத்தினை விட 02 ஆம் கட்டத்தின் போது கணனி மற்றும் உப பாகங்களின் விலை அதிகரித்திருந்தது. கணனி பாடசாலை ஆய்வுகூடத்தை தாபித்தல் முதலாம் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் ரூபா 3,577,164 தொகையான சேமிப்பொன்றை பெற்றுக்கொள்வதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(iii) பொருட்களை கையேற்கும் போது பொருட்களை கையேற்ற திகதிகள் குறிப்பிடப்படாமையால் உடன்படிக்கைக்கமைய பொருட்களை விநியோகிக்க வேண்டிய திகதியில் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக வெளிப்படுத்த முடியாதிருந்தது.

(iv) பெறுகைக்கு எதிராக அனுப்பப்பட்ட கடிதங்களுக்காக பதில்களை வழங்கும் போது அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.5.1(ஆ) பிரிவிற்கமைய வரிசை அமைச்சின் செயலாளரால் அமைச்சின் பெறுகைகள் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினதும் தலைவரை வினவி அமைச்சின் பெறுகைகள் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினதும் ஒருங்கிணைந்த கூட்டமொன்றை ஏற்பாடு செய்ய வேண்டும். எனினும், அவ்வாறு செய்யாது குறித்த கடிதங்கள் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு அனுப்பப்பட்டு அதன் பதில்கள் அமைச்சின் செயலாளரால் மேற்குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அறிவித்து கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தது.

**(இ) 1,250 கணனிகள் மற்றும் 250 பல்லூடக எறிகருவிகளை கொள்வனவு செய்தல்**

---

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்காக கணனி மற்றும் பல்லூடக எறி கருவிகளை கொள்வனவு செய்வதற்காக 2017 ஆகஸ்ட் 25 ஆந் திகதி பத்திரிகை அறிவித்தலொன்று பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், 07 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கிடைத்திருந்தது. இந்த கொள்வனவிற்காக தகுதியுடனான ரூபா 217,218,750 தொகையான ஆகக் குறைந்த விலைக்கேள்வி தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெறுகைகள் கால அட்டவணைக்கமைய பெறுகைகள் நடைமுறைகள் இடம்பெற்றிராததுடன், இதற்காக 04 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுக்கப்பட்டிருந்தது.

(ii) கணனிகளை கொள்வனவு செய்தல் வருட இறுதியில் அதாவது 2017 திசெம்பர் மாதத்தின்போது மேற்கொள்ளப்பட்டமையால் மீளாய்வாண்டில் ரூபா 28,914,700 தொகை மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) அந்தந்த மாவட்டங்களில் கணனி மற்றம் பல்லூடக எறி கருவிகளின் தேவைப்பாட்டினை இனங்காணாது ஒரு மாவட்டத்திற்கு 50 கணனிகள், 50 UPS கள் மற்றும் 10 பல்லூடாக எறி கருவிகள் வீதம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், பங்கீடானது அதன்படி இடம்பெற்றிருக்கவில்லை.

(iv) 2018 ஆம் ஆண்டின் போது கம்பஹா, கண்டி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் மாத்திரம் பொருள் பெறுவனவு கட்டளைகள் அனுப்பப்பட்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

**(ஈ) மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் ஊழியர்களின் தகவல்கள் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப திறன்களை அபிவிருத்தி செய்வதற்காக கணனி வன்பொருள் பயிற்சியினை வழங்குதல்**

---

மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இரு உத்தியோகத்தர்கள் வீதம் 750 உத்தியோகத்தர்களுக்கான இந்த பயிற்சி ஒருவருக்கு ரூபா 30,000 படி ரூபா 22.5 மில்லியன் செலுத்துவதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2017 மே 19 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாவட்ட அலுவலகங்களினாலும் அந்த பிரதேசத்தின் பயிற்சி நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). இந்த பயிற்சிக்காக ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 30,000 படி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதனை விட மிகவும் குறைவான பெறுமதிக்கு பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 15 மாவட்டங்களின் உத்தியோகத்தர் ஒருவருக்கான செலவின வீச்சானது ரூபா 1,537 முதல் ரூபா 15,000 வரை ஆகும். அதற்கமைய 382 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 2,810,578 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ii). மீளாய்வாண்டினுள் 15 மாவட்டங்களுக்கு மாத்திரம் வன்பொருள் பயிற்சிகளுக்காக நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. ஆண்டினுள் 750 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 382 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

**(உ) செயற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழ் மோட்டார் வாகனமொன்றையும் வேன் ஒன்றினையும் பெற்றுக்கொள்ளல்**

---

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). 2016 மார்ச் 17 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பிரிவிற்கமைய அரசாங்க நிறுவனங்களுக்காக செயற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களை பெற்றுக்கொள்ளும் போது போட்டி அடிப்படையிலான விலைக்கேள்வி கோரப்பட வேண்டிய போதிலும், இதன் போது கூறுவிலை கோரப்பட்ட முறைமை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii). அந்த சுற்றறிக்கையின் 2.3 II இன் கீழ் குத்தகையாளர் ஆகக் குறைந்தது 10 இற்குக் குறைவான வாகனங்களுடனான குழாமினை கொண்ட இலங்கையின் உலக பிரசித்தி பெற்ற வாகன நாமங்களின் பட்டய பிரதிநிதிகள், இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்துள்ள நிதி நிறுவனங்கள் மற்றும் மோட்டார் வாகனங்களை வாடகைக்கு வழங்கும் வியாபாரத்தில் ஈடுபடும் வணிகமாக இருக்க வேண்டும். எனினும், மோட்டார் வாகனமொன்றை பெற்றுக்கொள்வதற்கான கொள்வனவின் போது இந்த தகைமைகள் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii). தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் மூலம் 2016 நவம்பர் 03 ஆந் திகதி காரொன்றினை பெற்றுக்கொள்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மாதாந்த தவணை ரூபா 189,500 இற்கும் மேலதிக கிலோ மீட்டரொன்றிற்கு ரூபா 24 படி Jeep Model வாகனமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதன் போது Car Model வாகனமொன்றுக்காக முன்வைக்கப்பட்ட ஆகக்குறைந்த விலை ரூபா 118,500 மற்றும் ஆகக்கூடிய விலை ரூபா 180,826 ஆகும்.

(iv). பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.8(ஆ) இன் பிரகாரம் அகற்றல்களுக்குரிய காரணங்கள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், மோட்டார் வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கான விலைக்கேள்வி அகற்றப்பட்டமைக்கான காரணங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(v). விலைக்கேள்வி மதிப்பீட்டின் போது அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.8.2 ஆம் பிரிவிற்கமைய அகற்றல்கள் இனங்காணப்பட்டு சிறு அகற்றல்கள் மற்றும் பாரிய அகற்றல்கள் என வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும், வேன் வண்டியொன்றை பெற்றுக்கொள்ளும் போது அகற்றல்கள் தெளிவாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(vi). அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.2.1 இன் பிரகாரம் அமைச்சின் பொது பெறுகைகள் குழுவின் பரிந்துரை தொடர்பில் தமக்கு அறிவிக்கப்பட்டு ஒரு வாரத்தினுள் வரிசை அமைச்சின் செயலாளரால் வெற்றி பெற்ற விலைக்கேள்வியாளரை தெரிவு செய்தல் தொடர்பில் அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கும் எழுத்துமூலம் அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**2.5.1 வாகனங்களின் பயன்பாடு**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சிற்கு சொந்தமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் 26 வாகனங்கள் காணப்பட்டதுடன், எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் போன்றவற்றுக்காக ரூபா 8,687,249 தொகையும் வாகன சேவைப்படுத்தலுக்காக ரூபா 2,801,365 தொகையும், வாகன பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 9,209,685 தொகையும் வாகனக் காப்பீட்டிற்காக ரூபா 3,049,521 தொகை எனுமாறு ரூபா 23,747,820 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் 11 வாகனங்களுக்காக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட கிலோமீட்டர்களின்அளவானது முன்வைக்கப்படாத காரணத்தால், ஒரு கிலோமீட்டருக்காக செலவிடப்பட்டுள்ள தொகையை கணிப்பிட முடியாதிருந்தது.

(ii) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்திக்கமைய அந்தந்த மாதத்திற்காக மாதத்தின் கடமைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து சேவைக் குறிப்புக்கள் பேணப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 2.5.2 செயற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழான வாகனங்களின் பயன்பாடு

அமைச்சினால் செயற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழ் 02 வாகங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்கான குத்தகை தவணைக்காக ரூபா 4,634,595 தொகையும், எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் ஆகியவற்றுக்காக ரூபா 774,420 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களில் 52,383 கிலோமீட்டர்களுக்காக ரூபா 5,409,015 செலவிடப்பட்டிருந்தது.

### 2.5.3 அலுவலகத்தினை நடாத்துவதற்கான செலவினம்

(அ) அமைச்சிற்கு சொந்தமான கட்டிடமொன்று இல்லாதிருந்ததுடன் பழைய கட்டிடத்திற்காக ரூபா 18,006,660 தொகை மற்றும் புதிய கட்டிடத்திற்காக ரூபா 38,538,360 தொகையுமாக ரூபா 56,545,020 கூட்டுத்தொகையான வாடகை மீளாய்வாண்டிற்காக செலுத்தப்பட்டிருந்தது. வருடாந்த சுத்திகரிப்பு கட்டணமான ரூபா 1,745,888 மற்றும் பாதுகாப்பு சேவைகள் கட்டணம் ரூபா 3,515,078 ஆனமையால் மொத்தக் கட்டிடத்திற்குமான செலவினம் ரூபா 61,805,986 ஆக இருந்தது. அதற்கமைய, நபரொருவருக்கான அலுவலகத்தினை நடாத்திச் செல்லும் செலவினம் ரூபா 686,733 ஆக இருந்ததுடன், நபரொருவருக்கான மாதாந்த வாடகை செலவினம் ரூபா 628,278 ஆக இருந்தது.

(ஆ) தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினை தாபிப்பதற்காக 25,000 கன அடி கொண்ட புதிய கட்டிடத்தை வாடகைக்கு எடுப்பதற்கு 2017 பெப்ரவரி 06 ஆந் திகதி பத்திரிகை அறிவித்திலொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதற்காக 02 விலைக்கேள்விகள் கிடைத்திருந்ததுடன், விலைக்கேள்வி பிணை பொறுப்பு முன்வைக்கப்படாமையின் காரணத்தால் ஒரு விலைக்கேள்வி நிராகரிக்கப்பட்டு 30,586 கன அடிகளுடனான கட்டிமொன்று கன அடியொன்றிற்கு ரூபா 180 படி மாதமொன்றிற்கு ரூபா 5,505,480 தொகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 சனவரி 25 ஆந் திகதிய அமப/17/0085/749/001 ஆம் இலக்க அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 79/1, 5 ஆம் குறுக்கு வீதி, கொழும்பு 03 இல் அமைந்துள்ள பழமையான கட்டிடம் 2017 திசெம்பர் 25 வரையான வாடகைக் காலத்தினை நீடிப்பு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2017 மே 31 ஆந் திகதியிலிருந்து புதிய கட்டிடம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) புதிய கட்டிடத்தை வாடகைக்கு எடுத்த பின்னர் 2017 யூன் மாத்திலிருந்து 2017 ஒக்தோபர் 17 வரை பழைய கட்டிடத்திற்கு வாடகையாக ரூபா 7,942,659 மற்றும் அந்தக் காலப்பகுதிக்காக நீர் மற்றும் மின்சாரம் ஆகியவற்றுக்காக முறையே ரூபா 57,048 மற்றும் ரூபா 963,112 ஆக ரூபா 8,962,819 கூட்டுத்தொகை விளைவற்று செலுத்தப்பட்டிருந்தது.

(iii) புதிய கட்டிடத்திற்காக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மாதாந்த வாடகை ரூபா 4,500,000 ஆன போதிலும் மாதாந்தம் ரூபா 5,505,480 படியாக 03 வருட காலத்திற்காக பெறப்பட்டிருந்தது.

(iv) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.5.1 ஆம் பிரிவிற்கமைய அமைச்சின் பெறுகைக் குழுவின் தீர்மானத்தை தமக்கு அறிவித்து ஒரு வாரத்தினுள் அமைச்சின் செயலாளரால் அனைத்து விலைக் கேள்வியாளர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2017 மே 31 ஆந் திகதிய வாடகை உடன்படிக்கைக்கமைய மூன்று மாதங்களுக்கான வாடகைப் பணம் பாதுகாப்பு வைப்புத் தொகையாக செலுத்துவதற்கும் 03 வருடங்களுக்காக மாதாந்த வாடகைப் பணத்தை செலுத்தும் போது 03 மாதங்களுக்கு ஒரு தடவை குறித்த பணத்தை முதல் மாதத்தில் செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. இவ்வாறு 03 மாதங்களின் வாடகையாக ரூபா 16,516,440 தொகையை ஒரே தடவையில் செலுத்துதல் அரசிற்கு பாதகமாக நிலைமையொன்றாக அவதானிக்கப்பட்டது.

(vi) பழைய கட்டிடத்தில் அமைந்திருந்த முன்னாள் அமைச்சரால் பயன்படுத்தப்பட்ட அலுவலகம் மற்றும் குளியலறையை புதுப்பிப்பதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,599,897 செலவிடப்பட்டிருந்த போதிலும், புதுப்பிக்கப்பட்டதன் பின்னர் அது சுமார் 02 வருடங்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

---

ஆண்டினுள் அறவிடப்பட்ட வாகன நட்டமானது ரூபா 465,359 மற்றும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படாத 03 நட்டங்களின் பெறுமதியான ரூபா 330,072 தொடர்பில் ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**2.7 முகாமைத்துவ குறைபாடுகள்**

---

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் கலிகமுவையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கேகாலை தகவல் தொழில்நுட்ப வள நிலையத்திற்காக 2017 ஒக்தோபர் 30 ஆந் திகதியளவில் ரூபா 12,425,045 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அமைச்சினால் 2016 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் இந்த நிலையம் நிறைவு செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நிலையத்தில் நிறைவேற்றப்படும் பணிகள் தொடர்பான குறிப்பான திட்டமொன்று இல்லாதிருந்தமையால் கணக்காய்வு திகதி வரையிலும் அது குறித்த நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. நிலையத்தின்

நிர்வாகத்திற்காக மாவட்ட செயலாளரின் பங்குபற்றுடலான நிர்வாகக் குழுவொன்று நியமிக்கப்பட்ட வேண்டியதுடன், நிதி முகாமைத்துவத்திற்காக தனியானதொரு கணக்கு ஆரம்பிக்கப்பட்டு கணக்கின் நிர்வாகத்திற்காக உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும், அவ்வாறானதொரு நடைமுறை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கலிகமுவ தகவல் தொழில்நுட்ப வளங்கள் நிலையத்தின் தரைத் தளத்தின் எஞ்சிய பணிகளை முடிவுறுத்துவதற்குரியதாக செலுத்தப்பட்டிருந்த பட்டியல்களுக்கமைய கட்டிடத்தை சுற்றிலும் அமைந்துள்ள வடிகாண் மீட்டர் 62.62 இற்காக ஒப்பந்ததாரருக்கு ரூபா 229,189 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், நிலையத்தின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக விநியோகிக்கப்பட்டிருந்த தளபாட உபகரணங்கள் சுமார் 02 வருடங்களாகவும், கணனி மற்றும் ஏனைய மின்சார உபகரணங்கள் ஒரு வருட காலமாகவும் பாவனைக்கு எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன், கணனி மற்றும் மின்சார உபகரணங்கள் பயன்படுத்தப்படாது அவற்றின் உத்தராவதக் காலமும் நிறைவடைவதாக அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 ஆம் ஆண்டு அளவில் பாடசாலை மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவினை 75 சதவீதம் வரையிலும் உயர்த்துதல், தகவல் தொழில்நுட்பத்திற்கு இலகுவில் பிரவேசிக்கக்கூடிய சூழலொன்றை உருவாக்குதல், எதிர்கால தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு 2012 - 2014 ஆம் ஆண்டுகளின் போது தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் மிஸ்ஸக ந - நென பியச செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், கணனி ஆலோசகர் ஒருவர் இல்லாதிருந்தமை, இணையத்தள வசதிகள் இல்லாதிருந்தமை, செயலற்ற நிலைக்கு உள்ளாகிய கணனி உபகரணங்களை புனரமைத்தலுக்கான வேலைத்திட்டமொன்று இல்லாதிருந்தமை போன்ற குறைபாடுகளின் காரணமாக அந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நோக்கத்தினை வெற்றிகரமாக அடைய முடியாதுள்ளதாக கேகாலை மாவட்டத்தின் 15 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2016 ஆம் ஆண்டின் போது பாடசாலை கணனி ஆய்வுகூட செயற்திட்டத்தின் 2 ஆம் கட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தின் 30 பாடசாலைகளுக்கிடையே 16 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது அதிபர்கள் இந்த செயற்திட்டம் தொடர்பில் உரிய முறையில் அறிவுறுத்தப்பட்டிராமை வெளிப்படுத்தப்பட்டது.

- கணனி மற்றும் உப பாகங்களின் உத்தரவாதக் காலம் மற்றும் அக்காலப்பகுதியினுள் செயற்பட வேண்டிய முறை
- வைரஸ் மென்பொருட்களை நாளதுவரையாக்குதல்
- இணையத்தள வசதிகளை பெற்றுக்கொள்ளல் பாடசாலைகள் ஊடாக இடம்பெறுவதாக
- ஆசிரியர்களை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றச் செய்தல்
- செயலிழந்த மின் இயந்திரங்களை செயற்படுத்தல்
- கணனி மற்றும் உப பாகங்களை வேறு பணிகளுக்காக பயன்படுத்தல்

## 2.8 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஆயத்தப்படுத்தல்

---

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட வினாக் கொத்துக்கு அளிக்கப்பட்ட பதில்களுக்கமைய பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் உள்ளக வழிகாட்டலொன்று இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) சிரேஷ்ட பிரஜைகளின் மற்றும் கிராமிய மக்களின் வறுமையை குறைப்பதற்காக அவர்களின் வாழ்வாதாரத்திற்கு தேவையான தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்களுடாக பெற்றுக்கொள்ளும் நோக்குடன் நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிடப்பட்டிருந்த போதிலும், குறித்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் தோல்வியடைந்திருந்தது.

(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் நிறுவனம் தொடர்பில் அக்கறை செலுத்தும் தரப்பினர் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அவர்களை அறிவூட்டும் நிகழச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அண்மிக்கும் போது உரிய பணிகளை மேற்பார்வை செய்வதற்குரிய தேவையான குறிகாட்டிகள் மற்றும் அடைவுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலைபேறான குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நிறுவனத்தில் தற்போது காணப்படும் பௌதீக வளங்களின் முகாமைத்துவத்திற்காக நடைமுறையொன்று காணப்படவில்லை.

(ஊ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்குரிய பணிகளின் மேற்பார்வைக்கான நடைமுறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 2.9 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

---

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 113.80 | 102.16 | 11.64 | 10.22 |
| | மூலதனம் | 886.98 | 861.09 | 25.89 | 2.92 |
| | **மொத்தம்** | **1,000.78** | **963.25** | **37.53** | **3.75** |
| **2014** | மீண்டுவருபவை | 208.78 | 183.94 | 24.85 | 11.90 |
| | மூலதனம் | 1,509.22 | 950.81 | 558.41 | 37.00 |
| | **மொத்தம்** | **1,718.00** | **1,134.75** | **583.26** | **33.95** |
| **2015** | மீண்டுவருபவை | 101.74 | 94.14 | 7.60 | 7.47 |
| | மூலதனம் | 1,338.81 | 764.47 | 574.34 | 42.90 |
| | **மொத்தம்** | **1,440.55** | **858.61** | **581.94** | **40.39** |
| **2016** | மீண்டுவருபவை | 133.31 | 130.63 | 2.68 | 2.01 |
| | மூலதனம் | 1,443.86 | 865.09 | 578.78 | 40.09 |
| | **மொத்தம்** | **1,577.17** | **995.72** | **581.46** | **36.87** |
| **2017** | மீண்டுவருபவை | 219.11 | 214.43 | 4.66 | 2.13 |
| | மூலதனம் | 17,413.10 | 1,555.00 | 15,858.10 | 91.06 |
| | **மொத்தம்** | **17,632.21** | **1,769.43** | **15,862.76** | **89.96** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பாதீட்டு மதிப்பீடுகளை தயாரித்தல்**

அமைச்சிற்குரிய பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குரிய தேவையான நிதியேற்பாட்டினை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட்டிராமையால் பின்வரும் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தன.

(i) உரிய மதிப்பீடொன்று இல்லாது 22 செயற்திட்டங்களை மேற்கொள்வதற்காக நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்தமையால் முழு நிதியேற்பாடும் பயன்படுத்தப்படுத்த முடியாதிருந்தமையால், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 2,038.97 மில்லியன் அல்லது 89 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) **குறைநிரப்பு மதிப்பீட்டிலான ஒதுக்கங்களின் மூலம் நிதியேற்பாடுகளை மேற்கொள்ளல்**

குறைநிரப்பு மதிப்பீட்டிலான ஒதுக்கங்களின் மூலம் 04 மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 15,092,781,250 அல்லது 07 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக ரூபா 85,748,590 தொகை ஆண்டினுள் ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு கணனி நிதியேற்பாடுகளை பெற்றுக்கொள்ளல் அந்த செலவின விடயங்களின் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டின் 735 சதவீதமாகும். எவ்வாறெனினும், குறைநிரப்பு மதிப்பீடுகளின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்திற்காக பெற்றுக்கொண்ட நிதியேற்பாடுகளில் ரூபா 13,805,301,170 அல்லது 92.04 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

**(iii) நிதிப்பிரமாணம் 66 இன் கீழான வகைமாற்றம்**

அமைச்சின் நோக்கங்கள் மற்றும் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் இனங்காணப்பட்டு, அதற்கு பொருத்தக்கூடியவாறு நிதியேற்பாடுகளை பெற்றுக்கொள்ள மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 15 செலவின விடயங்களுக்குரியதாக ரூபா 5,504,071 தொகையான நிதியேற்பாடு நீக்கப்பட்டு 17 செலவின விடயங்களில் சேர்க்கப்பட்டிருந்தது.

**(iv) நிதியேற்பாடு மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையேயான விலகல்களை தெளிவுபடுத்தல்**

வருடாந்த மூலதன மதிப்பீடுகளை தயாரிக்கும் போது தேவைகள் இனங்காணப்பட்டு உரிய திட்டமொன்றுடன் நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், 05 செலவின விடயங்களின் ரூபா 2.40 மில்லியன் தொகையான சேமிப்பிற்கான காரணமாக ‘‘தேவைப்பாடு ஏற்படாமை’’ என குறிப்பிடப்பட்டிருந்தது.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை

(i) 04 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 21.31 மில்லியன் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் எவ்வித பயன்பாடும் இல்லாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) தகவல் தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செலவின தலைப்பின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் பணிகளுக்காகவும் நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதற்கமைய 2017 ஆம் ஆண்டின் போது அமைச்சின் தலைப்பிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய

நிதியேற்பாடு ரூபா 17,632,199,840 தொகையான இருந்ததுடன், மூலதன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக ரூபா 17,299,710,000 ஒதுக்கப்பட்டிருந்தது. இதன் போது வருடாந்த மதிப்பீட்டினூடாக ரூபா 2,299,710,000 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டிற்கமைய 2017 சனவரி 31 ஆந் திகதி குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் பொருளாதார டிஜிட்டல் மயமாக்கலுக்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்திற்கு ரூபா 15,000,000,000 ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மூலதன செலவினங்களில் ரூபா 15,858,100,572 அல்லது தேறிய நிதியேற்பாட்டின் 91 சதவீதம் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.10 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழான கட்டுநிதிக் கணக்கின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 6,279 ஆகும். அமைச்சினால் பேணப்பட்டிருந்த கட்டுநிதிக் கணக்கு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு மதிப்பீடுகளுக்கமைய மாதாந்தம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டுநிதிகள், மாதாந்தம் கோரப்பட்ட கட்டுநிதிகள் மற்றும் கிடைக்கப்பெற்ற கட்டுநிதிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| மாதம் | திட்டமிடப்பட்டவாறு கோரிய கட்டுநிதி | கோரப்பட்ட கட்டுநிதி | பெறப்பட்ட கட்டுநிதி | திட்டமிடப்பட்டவாறு கோரிய கட்டுநிதிக் கிடையேயான வேறுபாடு | கோரிய கட்டுநிதி மற்றும் கிடைத்த கட்டுநிதிக் கிடையேயான வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சனவரி | 510,349 | 10.55 | 17.88 | 510,338.45 | (7.33) |
| பெப்ரவரி | 10,824 | 1,114.71 | 182.31 | 9,709.29 | 932.4 |
| மார்ச் | 10,749 | 18.92 | 68.65 | 10,730.08 | (49.73) |
| ஏப்ரல் | 529,269 | 44.27 | 44.35 | 529,224.73 | (0.08) |
| மே | 9,849 | 132.85 | 300.41 | 9,716.15 | (167.56) |
| யூன் | 10,249 | 220.14 | 105.34 | 10,028.86 | 114.80 |
| யூலை | 10,574 | 359.70 | 154.79 | 10,214.30 | 204.91 |
| ஆகஸ்ட் | 10,299 | 180.20 | 162.40 | 10,118.80 | 17.80 |
| செப்தெம்பர் | 210,018 | 283.22 | 138.89 | 209,734.78 | 144.33 |
| ஒக்தோபர் | 10,799 | 410.60 | 59.24 | 10,388.40 | 351.36 |
| நவம்பர் | 608,709 | 131.10 | 147.98 | 608,577.90 | (16.88) |
| திசெம்பர் | 508,347 | 2,227.92 | 260.06 | 506,119.08 | 1,967.86 |
| மொத்தம் | 2,440,035 | 5,134.18 | 1,642.30 | 2,434,900.82 | 3,491.88 |

(ஆ) இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெறுகைகள் கால அட்டவணைக்கமைய பெறுகைகள் மேற்கொள்ளப்படாமையால் எந்தவொரு மாதத்திலும் திட்டமிடப்பட்ட கட்டுநிதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) திட்டமிடப்பட்டவாறு உரிய காலப்பகுதியினுள் பணிகள் நிறைவேற்றப்படாத சில பணிகள் ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டமையால் 2017 ஆண்டிற்காக கோரப்பட்ட மொத்த கட்டுநிதி அளவில் 43 சதவீதம் அதாவது ரூபா 2,227.92 மில்லியன் கோரப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் மாதத்தின் போது ஆகும். எனினும் அவற்றுள் ரூபா 260.06 மில்லியன் மாத்திரம் கிடைத்திருந்தது.

## 2.11 வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்தல்

அமைச்சினால் பேணிச் செல்லப்படும் 01 நடைமுறைக் கணக்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 03 வருடங்கள் செயலற்றிருந்ததுடன், அதில் ரூபா 200,500 தொகையான செயலற்ற மீதியும் காணப்பட்டது.

## 2.12 மனிதவள முகாமைத்துவம்

### 2.12.1 ஆட்சேர்க்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளனி வேதனம் ஆகியவற்றுக்கான செலவினம்

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான தனிநபர் ஊதிய செலவின தொகுதிக்காக ரூபா 33.19 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, நபருக்கான செலவினம் ரூபா 572,239 ஆகக் காணப்பட்டிருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 14 | 12 | 02 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 04 | 02 | 02 |
| (iii) | மூன்றாம் மட்டம் | 35 | 27 | 08 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 25 | 17 | 08 |
| | **மொத்தம்** | **78** | **58** | **20** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 20 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொடர்ந்தும் வெற்றிடங்கள் நிலவிய போதிலும் நிதியேற்பாடு பயன்படுத்தப்படாது எஞ்சுதல் தொடர்பில் பதவியணியிலான வெற்றிடங்கள் தாக்கம் செலுத்தியிருக்கவில்லை.

**2.13 அரச ஊழியர்களுக்கு பிணை வைத்தல்**

நிதிப்பிரமாணம் 880(1) இன் பிரகாரம், அரசாங்க நிதி, வருமானம், முத்திரை அல்லது பொருட்கள் ஆகியவற்றை பொறுப்பேற்றல் அல்லது பொறுப்பாக இருத்தல், அவ்வாறு இல்லையெனின் அரச நிதியை பகிர்ந்தளித்தல் அல்லது முத்திரை அல்லது பொருட்களை விநியோகித்தல் தொடர்பில நிர்வாக ரீதியில் பொறுப்புக்கூற வேண்டிய அல்லது அதிகாரத்தை ஒப்படைத்தலின் கீழ் அந்த பணிகள் கையளிக்கப்பட்டுள்ள அல்லது உத்தியோகத்தர்களும் அரசாங்க கணக்குகளுக்குரிய உறுதிச்சீட்டுக்களை சான்றுறுதிப்படுத்தும் காசோலைகளில் கையொப்பமிடுவோரும், தமது கடமைகளை நேர்மையுடன் நிறைவேற்றுவதாக 612 ஆம் அதிகாரமான அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைகள் கட்டளைச் சட்டத்திற்கமைய பிணை வைக்க வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.